ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமானுஜாய நம:
ஶ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஶ்ரீமத் வரவரமுனயே நம:



# திருப்பல்லாண்டு அவதாரிகை சாரம்

பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை
அருளிச் செய்ததிலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# திருப்பல்லாண்டு அவதாரிகை சாரம்

பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை
அருளிச் செய்ததிலிருந்து திரட்டியது

எம்பெருமானே சர்வத்துக்கும் ஸ்வாமியாகவும் சர்வத்தையும் நியமிப்பவனாகவும் இருக்க, அவனுக்கு தாசர்களாக அனைத்து ஜீவன்களும் இருக்கின்றனர். இந்த ஞானமும் அதன் விளைவாக அவனை அடைந்து கைங்கர்யம் செய்வதாகிய பலனையும் அடையாமல், ஜீவன்கள் அழிந்து போகக் கூடியதான தேகத்தினுடைய தொடர்பால் அனைத்தையும் தம்முடையது என்ற அஹங்கார புத்தியை செய்கின்றனர். இப்பேத புத்தியினால் தங்களையே ஸ்வாமியாக நினைத்து, அவனிடம் வசப்படுவதில் ஈடுபாடு இல்லாமல், இவ்வுலக விஷயங்களில் ஈடுபாடு கொள்கின்றனர். அதனால் வரும் வினைகளைப் பற்றி அவர்கள் அதிலேயே இழிவதைக் கண்ட எம்பெருமான், அவர்களை நல்வழிப்படுத்த, வேதம் முதலிய சாஸ்திரங்களைத் தந்து அதனுள் தானே நின்று ப்ரகாசித்தான்.

இந்த சாஸ்திரப் ப்ரமாணமும் அதன் ப்ரதானமும் கர்ம வாசனைப் பற்றினால் பயன் இல்லாமல் போகவே, ராம க்ருஷ்ண அவதாரங்களாக எம்பெருமான் வந்தான். ராமாவதாரத்தில் தன் முன்னோர் சொன்னதை ஒருவன் செய்யக் கடவன் என்ற தர்மத்தை தான் கடைப்பிடித்தும், எம்பெருமானுக்கு அடிமை செய்வதே ஆத்மாவுக்கு தர்மம் என்பதை இளைய பெருமாளைக் கொண்டு நிலை நிறுத்தியும், இவ்வர்த்தத்தை அடைவதற்கு அவனிடம் வசப்படுதலே தர்மம் என்பதை ஸ்ரீபரதாழ்வானைக் கொண்டு ப்ரகாசித்தும், அடிமையின் எல்லையை ஸ்ரீ சத்ருக்னாழ்வானைக் கொண்டு நிலை நிறுத்தியும் செய்தான். க்ருஷ்ணாவதாரத்தில் செய்யத் தக்கது எது என்பதை எல்லோருக்கும் உபதேசித்தான். இப்படி பல விதங்களால் ஆத்மாவுக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பை உணர்த்தியும், உயர்ந்தவன் தாழ வந்து தம்மிடையே நின்றதால், அவனுடைய ஈச்வரத் தன்மையை இவர்கள் நிராகரித்து தம்முடைய மூட புத்தியினால் அவனையும் அவன் சொற்களையும் ஏற்க மறுத்தனர்.

அவனும் மிருகத்தைப் பிடிக்க அதே ஜாதியை சேர்ந்த மற்றொரு மிருகத்தை அனுப்புவதைப் போல இஜ்ஜீவன்களை உய்விக்க வேண்டும் என்று கருதி பெரியாழ்வாரை அனுப்பினான். இத்தால் சாஸ்த்திரங்களாலும் எம்பெருமானாலும் திருந்தாதவரும் ஆழ்வார் அவதாரத்தினால் திருந்தினார்கள் என்ற வைபவம் சொல்லப்படுகிறது.

இதைத் தவிர மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவருக்கு ஏற்றம் உண்டு. அது என்னவென்னில், அவர்கள் தம்முடைய கைங்கர்யங்களினால் தங்களை அவன் ரக்ஷிக்க வேண்டும் என்று இருக்க, இவர் அவன் ரக்ஷையே தமக்கு எல்லாம் என்று இருப்பர். அவர்கள் தம்முடைய பயத்தைப் போக்குவதற்காக சர்வேஸ்வரனைப் பற்றி இருப்பர்கள். இவர் அவனுக்கு என் வருமோ என்று பயந்து, அதைப் போக்குவதற்காக ப்ரயத்னம் செய்து இருப்பர்.

இதைப் போலவே மற்றைய ப்ரபந்தங்களைக் காட்டிலும் திருப்பல்லாண்டுக்கு ஏற்றம் உண்டு. திருப்பல்லாண்டு வேத புராண இதிஹாஸங்களைப் போல சிலரே கற்றறியத் தகுதி உடையதாய் இல்லாமல் இருக்கும். திருவாய்மொழியில் த்ரிமூர்த்தி சாம்யம் போல் சிற்சில இடங்களில் அருளிச் செய்தமையால் அது எவ்வாறு சொல்லப்பட்டது, அதன் உட்பொருள் என்ன என்பதை ஆராய்ந்து உணர வேண்டி இருக்கும். அவ்வருமையும் திருப்பல்லாண்டுக்கு இல்லை.

மஹாபாரதமோ என்ன சொல்லிற்று என்று புரியாத வண்ணம் பெரும் பரப்பாய் இருக்கும். ப்ரணவ சப்தமோ மிகச் சிறியதாய் சகல வேதார்த்தங்களும் அதனுள் இருந்தாலும் எளிதில் கிடைக்காமல், அதற்குள் தேடிக் கண்டு பிடிக்கும் நிலையில் இருக்கும். அவ்வாறு இல்லாமல், பன்னிரண்டு பாட்டாய், பகவத் கைங்கர்யத்தை எளிதில் வெளிப்படுத்தும் பெரும் சிறப்பு திருப்பல்லாண்டுக்கு உண்டு. மேலும் இப்ப்ரபந்தத்துக்கு தன்னை அனுசந்திப்பவனுக்கு எம்பெருமான் திருவடிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஏற்றமும் உண்டு.

இப்ப்ரபந்தத்தில் பெரியாழ்வார் எம்பெருமானை பிராட்டியோடு நேரில் கண்டு, அவனிடம் பரிவுடன் கூடிய அன்பைக் கொண்டு, இவ்வுலகில் வந்திருப்பதால் அவனுக்கு என்ன தீங்கு வருமோ என்று கலங்கி, அவ்வாறு நேராமல் நித்யமாய் அவன் மங்களம் ஓங்க வேண்டும் என்று பாடுகிறார்.

குறையே அற்றவனான எம்பெருமானை நேரில் கண்டால் தம்முடைய மங்களங்களை அவனிடம் ப்ரார்த்திப்பது ந்யாயமாய் இருக்க, அவனுடைய மங்களங்களை வேண்டுவது தகுமோ என்னில், அவனைக் கண்டு அவன் அருளால் பக்திப் பரவசத்தில் அழுந்தியதால் அவனுடைய ஏற்றம், சக்தி அனைத்தையும் மறந்து, அவன் உயர்வே தன் உயர்வாகக் கொண்டு மங்களாசாஸனம் செய்வது பொருந்தும்.

பக்தி அவனை அடைவதற்கு ஒரு உபாயமாக இருக்க, அது அவர் மனதைக் கெடுத்து எம்பெருமானையே மங்களாசாஸனம் செய்யத் தூண்டுமோ என்னில், இது புதிய விஷயம் அன்று. அயோத்யா மக்கள் சர்வ தேவதைகளையும் ரக்ஷிக்கும் எம்பெருமானான ஸ்ரீராமனுடைய குணங்களை ரக்ஷிக்க வேண்டும் என்று சகல தேவதைகளையும் நமஸ்கரித்தார்கள். ஸ்ரீராமன் தாடகை முதலியோரை வெற்றி கொண்டதை அறிந்தும், அவன் முன் ஸ்ரீபரசுராமர் வந்ததைக் கேட்டதும் அஞ்சி அவரிடம் சரண் புகுந்து, ஸ்ரீராமன் வென்றவுடன் தானும் தன் பிள்ளைகளும் மறு பிறவி அடைந்ததாக நினைத்திருந்தார் ஸ்ரீதசரதர். ஸ்ரீகௌசலையாரும் ஸ்ரீராமனுக்கு மங்களம் உண்டாகட்டும் என்று மங்களாசாஸனம் செய்தாள். தண்டகாரண்யத்து ரிஷிகளும் தங்களை ரக்ஷிக்க வந்திருக்கும் ஸ்ரீராமனை மங்களாசாஸனம் செய்தார்கள்.

அவருடைய மேன்மையெல்லாம் உணர்ந்திருந்த சீதா பிராட்டியும் அவரை மங்களாசாஸனம் செய்து, திக்குகளை அவருக்கு ரக்ஷகராக இருக்க வேண்டினாள். ஸ்ரீ க்ருஷ்ணராக சங்கு சக்கரத்தோடே தோன்றிய போதிலும் கம்சனால் என்ன நேருமோ என்று பயந்து, அவ்வடிவை மறைத்துக் கொள்ள வேண்டும் என்று ப்ரார்த்தித்தனர் ஸ்ரீவசுதேவரும் தேவகி பிராட்டியும்.

இவ்வாறு மங்களாசாஸனம் செய்வது இவ்வுலகிலும் அன்றாடம் காணும் விஷயமே. தவம் செய்து பெற்ற தன் குழந்தை ஒரு துன்பம் கூட வராமல் இருக்கும் நிலையில் இருந்தாலும். அக்குழந்தையின் மேல் உள்ள ப்ரேமையினால் அதற்கு என் வருமோ என்று கலங்கி இருப்பாள் அதன் தாய். விலை மதிக்க முடியாத ஒரு மாணிக்கத்தை அடைந்தவன் அது நன்கு காக்கப்பட்டு இருந்தாலும், அது களவு படுமோ, அதற்கு என்ன தீங்கு வருமோ என்று பயப்பட்டு இருப்பான். இப்படி இருக்கையில் எல்லையற்ற அழகும் வனப்பும் தேஜஸ்ஸும் பொருந்திய எம்பெருமானைக் கண்டதும் ஆழ்வார் அவனுக்கு என் வருமோ என்று கலங்குவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

மேலே சொன்னவர்கள் இவ்வுலகில் ஆட்பட்டவர்கள். அவர்கள் அவ்வாறு கலங்குவது ந்யாயம். ஆழ்வாரோ அவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர். ரக்ஷகன் அவன், ரக்ஷிக்கப்படுபவர் நாம் என்ற ஞானத்தை அவர் மாற்றலாமோ என்னில், கர்மத்துக்குட்பட்ட விஷயத்தில் தவறான ஞானம் கைவிடத் தக்கது; எம்பெருமான் விஷயத்தில் சிறப்புக்குரிய விஷயமாக வந்ததினால் அதுவே கொள்ளத் தக்கது.

மேலும் நமக்கும் அவனுக்கும் உள்ள சம்பந்தத்தை உணர்ந்த பின் அவனை மங்களாசாஸனம் செய்வது ஞானத்தினால் விளைவதே ஆகும். அவனுக்கு வசப்படுவதின் எல்லையாவது, தன் உயர்த்தியை நினையாது தான் அழிகிலும் அவன் உயர்த்தியை விரும்புவதேயாம். இந்த உயர்ந்த வேதாந்த அர்த்தமே திருப்பல்லாண்டில் உணர்த்தப்படுகிறது.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்